கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 29ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.8/2025
இன்
அசல் வழக்கு எண்.108/2020
* * * *

1. சுலோச்சனா ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1. பாப்பா
2. முருகன்
3. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   மதுரை மாவட்டம்
4. வருவாய் வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்
   திருமங்கலம்.
5. வட்ட துணை ஆய்வாளர்
   (நில அளவை)
   வட்டாட்சியர் அலுவலகம்
   திருமங்கலம்.
6. சார்பதிவாளர்,
   சார்பதிவாளர் அலுவலகம்
   திருமங்கலம். ... எதிர்மனுதாரர்கள்/
   பிரதிவாதிகள்

இம்மனுவானது 18.04.2026–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மாதவன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முகமது அஜிஸ்தீன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் இந்நிர் இடையீட்டு மனுவில் மட்டும் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்த வந்த இந்நிர் இடையீட்டு மனுவில், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

அசல் வழக்கின் பிராது, பிராதின் பரிகாரம் மற்றும் நீதிமன்ற கட்டணத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டி இம்மனுவானது மனுதாரர்/வாதியால் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்/வாதி தரப்பு இந்நிர் இடைநிலை மனுவானது அசல் வழக்கினை காலதாமதப்படுத்தவேண்டும் என்று நோக்கில் தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்நிர் இடையீட்டு மனுவினை அனுமதிக்கக்கூடாது என்று குறிப்பிட்டு ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

**3. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

3.1) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது 19.02.2020 மற்றும் 06.03.2020 ஆகிய தேதியிட்ட ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக்கோரியும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்நிர் இடைநிலை மனுவானது அசல் வழக்கின் பிராது, பிராதின் பரிகாரங்கள் மற்றும் நீதிமன்ற கட்டணத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) மேலும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவில் கீழ்க்கண்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

i) அசல் வழக்கின் பிராதில் 11வது பத்திக்கு அடுத்து,

11அ) 23.10.2019ம் தேதியிட்ட 4ம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வாரிசு சான்றிதழ் எண்.TN 720191023994 என்ற ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கக்கோரியும்,

ii) பிராதில் பரிகாரத்தில் ஈ) பரிகாரத்திற்கு அடுத்து ஈஈ) 23.10.2019ம் தேதியிட்ட 4ம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வாரிசு சான்றிதழ் எண்.TN 720191023994 என்ற ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக்கோரியும்,

iii) பிராதில் தாவாவின் மதிப்பு ரூ.12,000/– என்று இருப்பதை ரூ.17,000/– என்றும், நீதிமன்ற கட்டணத்தின் மதிப்பு ரூ.360/– என்று இருப்பதை ரூ.510/– என்று சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும்,

iv) தாவா மதிப்பில் ஈ) பரிகாரத்திற்கு அடுத்து
வாதி தாவா ஈஈ) பரிகாரத்திற்காக தாவா சொத்தின்
மதிப்பு ரூ.5000/–

அதற்கான நீதிமன்ற கட்டணமாக தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள்மற்றும் வழக்குகள் மதிப்பீட்டு சட்டப் பிரிவு 25(d)—ன் கீழ் ரூ. 150/— என்றும்,

மேலும், தாவா மொத்த மதிப்பு ரூ.12,000/— என்று இருப்பதை ரூ.17,000/— என்றும், நீதிமன்ற கட்டணத்தின் மதிப்பு ரூ.360/— என்று இருப்பதை ரூ.510/— என்று சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3) இந்நிலையில், இந்நிர் மனுதாரர்/வாதியின் இந்நிர் இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் மேற்கொள்வது பற்றி பரிசீலினை செய்கையில், மனுதாரர்/வாதி தரப்பில், அசல் வழக்கில் சாட்சி விசாரணையின்போது பி.வா.சா.1 தனது நிரூபண வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பி.வா.சா.ஆ.1 ஆக 23.10.2019ம் தேதியிட்ட 4ம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வாரிசு சான்றிதழ் எண்.TN 720191023994 என்ற ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் மேற்படி ஆவணத்திற்கும் இந்நிர் மனுதாரர்/வாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வாரிசு சான்றிதழ் பெற்ற விவரம் இந்நிர் மனுதாரர்/வாதிக்கு கடந்த 18.04.2024ம் தேதியன்று

தான் தெரியவந்ததால் மேற்படி வாரிசு சான்றிதழ் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்வது அவசியமானது என்றும், அதன்பொருட்டு பின்னிட்டு மனுதாரர்/வாதி குறிப்பிட்டுள்ள சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டுள்ள வாதத்தினை கருத்தில்கொண்டும், மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆனது இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டபோது இந்நிர் மனுதாரர்/வாதியால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு குறியீடு செய்துள்ளதை கருத்தில்கொண்டும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு வாதத்தின்போது, அசல் வழக்கில் இந்நிர் மனுதாரரால் மற்றொரு இடையீட்டு மனு எண்ணான.3/2020ல் 1ம் எதிர்மனுதாரரின் தாயின் 23.10.2019ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழை 1வது ஆவணமாக தாக்கல் செய்து, மேற்படி மனுவில் கடந்த 05.04.2021ம் தேதியன்று இந்நிர் மனுதாரருக்கு எதிராக உத்தரவு பெற்றும், மேற்படி உத்தரவினை எதிர்த்து CMA No.6/2021 மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி 23.10.2019ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழின் அடிப்படையில் வருவாய்துறையால் 06.03.2020ம் பட்டா மாறுதல் பெற்றதை மறைத்து இந்நிர் மனுதாரருக்கு தற்போது தான் மேற்படி சங்கதி தெரியவந்ததது போல 5 ஆண்டுகளுக்கு பின் இந்நிர் இடையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளதால் இந்நிர் இடைநிலை மனுவானது காலவரையறை

தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் Limitation is a mixed question of law and facts என்ற நிலையில், மேற்படி காலவரையறை தோஷத்தினை பற்றி அசல் வழக்கில் முழு சாட்சி விசாரணைக்கு பின்னரே தெரியவரும் என்பதை கருத்தில்கொண்டும், இந்நிர் மனுதாரர்/வாதியால் குறிப்பிட்டுள்ள மேற்படி சீர்திருத்தங்களால் அசல் வழக்கின் தன்மை மாற்றப்பட்டாலும் இந்நிர் மனுதாரர்/வாதி கோரியுள்ள சீர்திருத்த பரிகாரமானது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இடைநிலை மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.29 17:58:25 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு: –**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.29 17:58:33 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.08/2025
இன்
அசல் வழக்கு எண்.108/2020
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 29.04.2026